**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(16.03.2024 முதல் 20.03.2024)**

**அறிக்கை எண் 022/2024** **தேதி.15.03.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்படவில்லை

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 12.03.24 முதல் 14.03.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 38°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 29 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (12.03.2024 முதல் 14.03.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 20.03.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12/03 | 13/03 | 14/03 | தேதி | நாள் - 1 16/03 | நாள் - 2 17/03 | நாள் - 3 18/03 | நாள் - 4 19/03 | நாள் - 5 20/03 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 36 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 38 | 37 | 38 | 38 |
| 23 | 23 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 25 | 26 | 26 |
| 3 | 3 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 1 | 0 | 0 |
| 74 | 75 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 70 | 70 | 70 |
| 32 | 29 | 46 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 11 | 8 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 8 | 8 |
| 90 | 90 | 200 | காற்று வீசும் திசை | 70 | 50 | 70 | 90 | 110 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (16.03.2024 முதல் 20.03.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின்

வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் □□□□□□□□□□□□ திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **16-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **17-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **18-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **19-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **20-03-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் பொதுவாக தெளிவான வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சராசரியினைவிட $1^{\circ}$ கூடுதலாக உயர வாய்ப்புள்ளது. அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருகிறது. மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>நீர் பாசனத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் இருக்கும் இடங்களில் மண் மூடாக்கு (மண்ணின் மேற்புறத்திலுள்ள 2 முதல் 3 செ மீ ஆழத்திற்கு கிளறி விடுதல்) செய்யவும். |
| எள் | வளர்பருவம் | தற்போது நிலவும் வானிலையால் எள்ளில் சாறு உறுஞ்சும் வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசல் (அ) வேப்பஎண்ணை சார்ந்த பூச்சிக்கொல்லி மருந்தினைத் தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | வெப்பநிலை அதிகரித்து ஈரப்பதம் குறைய வாய்ப்புள்ளதால் கரும்பில் இளங்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. இதற்கு அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக் கொள்ளவும் |
| காய்கறிகள் | வளர்பருவம் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் காய்கறிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகிறது. இதற்கு முன்பாதுகாப்பு நடவடிக்கையாக 5 சத வேப்பங்கொட்டை வடிகரைசலை தெளிப்பதன் மூலம் இலைசுருளும் நச்சுயிரி நோய் வருவதையும் தவிர்க்கலாம். பூச்சி தாக்கம் அதிகமாக இருப்பின் இமிடாகுளோபிரிட் 17.8 SL 0.3 மில்லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| வாழை | | காற்றின் வேகம் மணிக்கு 8 – 10 கி.மீ வரை காணப்படுவதால் 5 மாதங்களுகங்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதத்தில் மிகுந்த வேறுபாடு காணப்படுவதால், வாழையில் குருத்து அழுகல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த ப்ளீசிங் பவுடர் 20 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்றவும். பத்து நாட்கள் இடைவெளியில் மற்றொரு முறை பின்பற்றவும். மண்ணில் மருந்து இடும் முன் போதிய மண் ஈரம் இருக்குமாறு பார்த்து கொள்ளவும்.<br>பசுந்தாள் உர விதைகளை செடியை சுற்றி விதைக்கவும். |
| தென்னை | | தென்னை மரங்களில் காண்டா மிருக வண்டு தாக்கம் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த வயது முதிர்ந்த இலைகளை நீக்கிவிட்டு, ஒரு மரத்திற்கு 3 முதல் 4 பூச்சி உருண்டைகளை இடவும்.<br>போரேட் குருனை மருந்தை 5 கிராம் அளவில் காடாதுணியில் கட்டி இரு மட்டைகளுக்கு இடையில் வைக்கவும். 6 மாத இடைவெளியில் மீண்டும் ஒரு முறை வைக்கவும். |
| | | கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு தேவைப்படும் பசுந்தீவனங்களான தீவனச்சோளம் மற்றும் கம்பு நேப்பியர் ஒட்டு புல்லினை 30 சதவீதம் இறவை சாகுபடி பகுதியில் வளர்ப்பதன் மூலம் கோடையில் பால்மாட்டின் தீவன தேவையை பூர்த்தி செய்யலாம். |
| கால்நடைகள் | | பகல் நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச்சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். கால்நடைகளை வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.<br>கறவை மாடுகளுக்கு செயற்கை கருத்தரிப்பு முறையினை காலை 7மணி முதல் 10 மணி வரை மேற்கொள்ளவும்.<br>கால்நடைகளுக்கு ஆட்டுக் கொள்ளை நோய்க்கு எதிராக அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

- வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் காய்கறிகளில் 5 சத வேப்பங்கொட்டை வடிகரைசலை தெளிப்பதன் மூலம் சாறு உறிஞ்சும் பூச்சிகளினால் இலைசுருளும் நச்சுயிரி நோய் வருவதையும் தவிர்க்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**